சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 13.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **3/2026** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-1 |
| சாட்சியின் பெயர் | : | புவனேஷ்வரி |
| கணவர் பெயர் | : | மனோகரன் |
| கிராமம் | : | புலிவளம் |
| தாலுக்கா | : | திருவாரூர் |
| தொழில் | : | வேலை இல்லை |
| வயது | : | 22 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவள் ஆவேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் எனது கணவர் ஆவார். அவர் இந்து அம்மலக்காரர் வகுப்பை

சேர்ந்தவர் ஆவார். நான் கல்லூரியில் 2022 ஆம் வருடம் நன்னிலத்தில் உள்ள ஆனந்த லெட்சுமி கல்லூரியில் படித்து வந்தேன். என்னுடன் படித்து வந்த தோழி பிரதிபா என்பவரின் உறவினர் தான் எதிரி ஆவார். நான் கல்லூரியில் படிக்கும் போது நான் திருவாரூரில் இருந்த நன்னிலத்திற்கு பேருந்தில் சென்று வரும் போது எனது தோழியின் உறவினரான எதிரி எனக்கு அறிமுகமானார். நான் அவருடன் அடிக்கடி பேசியதில் எனக்கும் அவருக்கும் இடையே காதல் ஏற்பட்டு விட்டது. இந்த விபரம் மெல்ல மெல்ல எனது உறவினர் மூலமாக எனது பெற்றோருக்கு தெரிந்துவிட்டது. எனது பெற்றோர்கள் என்னை கண்டித்தனர். நான் எதிரியிடம் எனது வீட்டில் உள்ளவர்கள் என்னை கண்டிப்பதாக தெரிவித்தேன். எதிரி என்னிடம் திருமணம் செய்து கொள்ளலாம் என்று கூறினார். நான் அதற்கு சம்மதம் தெரிவித்தேன். எனது ஊரில் உள்ள எனது உறவினர்கள் என் பெற்றோரிடம் நானும் எதிரியும் காதலிப்பதை தெரிந்து கொண்டு சத்தம் போட்டார்கள். இதனால் எனது தகப்பனார் என்னை பல முறை கண்டித்தார். இருந்தும் நான் அவரை தொடர்ந்து காதலித்து வந்தேன். என் பெற்றோருக்கு தெரியாமல் திருமணம் செய்து கொள்ளலாம் என முடிவு செய்திருந்த நிலையில் ஊரில் உள்ளவர்களுக்கு இந்த விபரம் தெரிந்து விட்டது. ஊரில் உள்ள உறவினர்கள் என் பெற்றோருக்கு அழுத்தம் கொடுத்ததன் காரணமாக திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். எங்களுடன் வந்திருந்த உறவினர் ஒருவர் எழுதிக்கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்து காவல் நிலையத்தில் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரில் உள்ள பொருண்மைகள் எனக்கு தெரியாது. தற்போது புகாரில் உள்ள விபரங்களை படித்தால் எனக்கு தெரியுமா என்றால் தற்போது புகாரை படித்து பார்த்தால் அதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால் மேற்படி புகாரில் உள்ள விபரங்களை நான் கூறவில்லை. புகாரில் உள்ள

கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. என்னை போலீசார் குற்றவில் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர் செய்தார்களா என்றால் ஆமாம். நீதிபதி விசாரித்தாரா என்றால் ஆமாம். அங்கு விசாரணை செய்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க தற்போது என்னிடம் காட்டப்பட்டுள்ள புகாரில் உள்ளவாறு வாக்குமூலம் கொடுத்தேன். எதிரிக்கும் எனக்கும் எப்போது எங்கு என்றால் கடலூர் மாவட்டத்தில் உள்ள திருவந்திபுரம் கோவிலில் திருமணம் கடந்த 04.03.2026 ஆம் தேதி நடைபெற்றது. மேற்படி திருமணம் நடைபெற்றதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் அன்றைய தினமே கடலூரில் உள்ள சார் பதிவாளர் அலுவகத்தில் திருமணத்தை பதிவு செய்தோம்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

**அரசு தரப்பு சாட்சி விசாரணை தொடர்ச்சி**

என்னை போலீசார் விசாரித்தபோது எதிரி என்னை காதலிப்பதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் கூறி பல முறை உடலுறவு வைத்துக்கொண்டதாகவும், பின்னிட்டு என் சாதியின் பெயரை குறிப்பிட்டு சாதியை காரணமாக காட்டி திருமணம் செய்து கொள்ள மறுத்துவிட்டார் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் என்னை திருமணம் செய்துகொள்ள எதிரியிடம் கேட்டபோது எதிரி தகாத வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பின்பு நானும் எதிரியும் திருமணம் செய்து கொண்டோம் என்று

சொன்னால் ஆமாம். நானும் எதிரியும் திருமணம் செய்து கொண்டதால் எதிரியை காப்பாற்ற வேண்டி மேற்படி பொருண்மைகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.13 18:23:27 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.